Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM**

| | | | |
|---|---|---|---|
| Calendar | .. .. | } | |
| Miscellaneous | .. .. | } | |
| Preliminary Register | .. .. | } | **S.C. 27/2025** |
| Sessions | .. .. | } | |
| | | } | Prosecution – **PW5** |
| Deposition of witness for | | } | Defence – |
| | | } | Court – |

| | | |
|---|---|---|
| Name | : | பிரபாகரன் |
| Father/Husband Name | : | முனியசாமி |
| Village | : | புதுப்பட்டினம் தோப்பு |
| Taluk | : | திருவாடானை |
| Calling | : | டைல்ஸ் ஒட்டும் வேலை |
| Age | : | 35 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 03.06.2026.

(எதிரிகள் ஆஜர்.)

**முதன்மை விசாரணை:–**

நான் புதுப்பட்டினம் கிராமத்தில் வசித்து வருகிறேன். டைல்ஸ் ஒட்டும் வேலை செய்து வருகிறேன். அ.சா.4 கருப்பையாவை தெரியும். அ.சா.1, 2 சாட்சிகளா சோனியா, பல்கரசு ஆகியோர்களை தெரியும். அ.சா.1 சோனியா கொடுத்த புகார் சம்மந்தமாக தொண்டி போலிசார் என்னை விசாரித்தார்களா என்றால் தெரியாது. என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 2 வது கையெழுத்து என்னுடைய கையெழுத்துதான். அந்த கையெழுத்தை 3, 4 வருடங்களுக்கு முன்பு எங்கள் ஊரில் உள்ள கருமாரியம்மன் கோவில் அருகே கூட்டமாக இருந்தது. அந்த இடத்திற்கு நான் சென்றபோது போலிசார்

இருந்தார்கள். அப்போது போலிசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு படம் வரைந்து விசாரித்துக்கொண்டிருந்தார்கள். அதற்கு சாட்சியாக கையெழுத்து போடும்படி கேட்டுக்கொண்டதால் நானும், கருப்பையாவும் கையெழுத்து போட்டுக்கொடுத்தோம். என்னிடம் காட்டப்படும் அத்தாட்சியில் உள்ள 2 வது கையெழுத்து என்னுடைய கையெழுத்துதான். பார்வை மகசர் மற்றும் அத்தாட்சியில் உள்ள கையெழுத்துக்கள் மட்டும் முறையே **அ.சா.ஆ.4 மற்றும் 5**. எதற்காக கையெழுத்து கேட்கிறீர்கள் என்று கேட்டேன், அதற்கு போலிசார் கருமாரியம்மன் கோவில் அருகே நடந்த பிரச்சனை பற்றி தெரியுமா என்று கேட்டார்கள், தெரியாது என்று சொன்னேன். போலிசார் அங்கு நடந்த பிரச்சனை சம்மந்தமாக விசாரிக்க வந்துள்ளதாகவும், அதற்கு ஒரு கையெழுத்து போடும்படி சொன்னதால் போட்டுக்கொடுத்தேன். நான் கையெழுத்து போடும்போது எங்கள் ஊரை சேர்ந்த முனியசாமி மகன் பிரபாகரனும் கையெழுத்து போட்டார். எங்கள் முன்னிலையில் போலிசார் பொருட்கள் எதையும் கைப்பற்றவில்லை.

(இந்த சாட்சியை அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.)

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u> –

போலிஸ் விசாரணையில் கடந்த 31.07.2021 ம் தேதி இரவு 11.45 மணிக்கு எங்கள் ஊரைச் சேர்ந்த பால்க்கரசு என்பவரை கத்தியால் குத்திவிட்டார்கள் என கேள்விப்பட்டு நானும், கருப்பையா என்பவரும் பால்க்கரசு வீட்டிற்கு அருகில் நின்று பேசிக்கொண்டிருக்கும்போது அங்கு வந்த தொண்டி காவல் நிலைய சார்பு ஆய்வாளர் சம்பவ இடத்தை பார்வையிட்டு வரைபடம் மற்றும் பார்வை மகசர் தயார் செய்து அந்த இடத்தில் பால்கரசுவை குத்த பயன்படுத்திய 25 செமீ நீளமுள்ள பிளாஸ்டிக் கைப்பிடியுடன் கூடிய கத்தியை சார்பு ஆய்வாளர் எங்கள் முன்பு சார்பு ஆய்வாளர் கைப்பற்றினார் என்றும், அதற்கு சாட்சியாக நானும், கருப்பையாவும் அத்தாட்சியில் கையெழுத்து செய்தோம் என்றால் சரியல்ல. எதிரிகள் எங்கள் ஊரைச் சேர்ந்தவர்கள் மற்றும் உறவுக்காரர்கள் என்பதால்

அவர்களை காப்பற்றவேண்டும் என்பதற்காக சார்பு ஆய்வாளர் எங்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு வரைபடம், பார்வை மகசர் தயார் செய்யவில்லை என்றும், கத்தியை கைப்பற்றி அத்தாட்சி தயார் செய்து எங்களிடம் கையெழுத்து பெறவில்லை என்றும் போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க கையெழுத்து மட்டும் போட்டுக்கொடுத்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u> – இல்லை.

Sd/-சி.மோகன்ராம்,

கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.

Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM**

| | | | |
|---|---|---|---|
| Calendar | .. .. | } | |
| Miscellaneous | .. .. | } | |
| Preliminary Register | .. .. | } | **S.C. 27/2025** |
| Sessions | .. .. | } | |
| | | } | Prosecution – **PW4** |
| Deposition of witness for | | } | Defence – |
| | | } | Court – |

| | | |
|---|---|---|
| Name | : | கருப்பையா |
| Father/Husband Name | : | காயாம்பு |
| Village | : | புதுப்பட்டினம் தோப்பு |
| Taluk | : | திருவாடானை |
| Calling | : | டிரைவர் |
| Age | : | 45 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 03.06.2026.

<u>(எதிரிகள் ஆஜர்.)</u>

**முதன்மை விசாரணை:–**

நான் புதுப்பட்டினம் கிராமத்தில் வசித்து வருகிறேன். டிரைவராக வேலை செய்து வருகிறேன். சா.சா.7 பிரபாகரனை தெரியும். அ.சா.1, 2 சாட்சிகளா சோனியா, பல்கரசு ஆகியோர்களை தெரியும். அ.சா.1 சோனியா கொடுத்த புகார் சம்மந்தமாக தொண்டி போலிசார் என்னை விசாரித்தார்களா என்றால் இல்லை. என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 1வது கையெழுத்து என்னுடைய கையெழுத்துதான். அந்த கையெழுத்தை 4, 5 வருடங்களுக்கு முன்பு வேலைக்கு சென்று வரும்போது எங்கள் ஊரில் உள்ள கருமாரியம்மன் கோவில் அருகே நின்று கொண்டிருந்தபோது போலிசார் கேட்டுக்கொண்டதால்

எழுதாத ஒரு வெள்ளைப்பேப்பரில் கையெழுத்து போட்டுக்கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் அத்தாட்சியில் உள்ள 1வது கையெழுத்து என்னுடைய கையெழுத்துதான். பார்வை மகசர் மற்றும் அத்தாட்சியில் உள்ள கையெழுத்துக்கள் மட்டும் முறையே **அ.சா.ஆ.2 மற்றும் 3**. எதற்காக கையெழுத்து கேட்கிறீர்கள் என்று கேட்டேன், அதற்கு போலிசார் கருமாரியம்மன் கோவில் அருகே நடந்த பிரச்சனை பற்றி தெரியுமா என்று கேட்டார்கள், தெரியாது என்று சொன்னேன். போலிசார் அங்கு நடந்த பிரச்சனை சம்மந்தமாக விசாரிக்க வந்துள்ளதாகவும், அதற்கு ஒரு கையெழுத்து போடும்படி சொன்னதால் போட்டுக்கொடுத்தேன். நான் கையெழுத்து போடும்போது எங்கள் ஊரை சேர்ந்த முனியசாமி மகன் பிரபாகரனும் கையெழுத்து போட்டார். எங்கள் முன்னிலையில் போலிசார் பொருட்கள் எதையும் கைப்பற்றவில்லை.

(இந்த சாட்சியை அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.)

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u> –

போலிஸ் விசாரணையில் கடந்த 31.07.2021ம் தேதி இரவு 11.45 மணிக்கு எங்கள் ஊரைச் சேர்ந்த பால்க்கரசு என்பவரை கத்தியால் குத்திவிட்டார்கள் என கேள்விப்பட்டு நானும், பிரபாகரன் என்பவரும் பால்க்கரசு வீட்டிற்கு அருகில் நின்று பேசிக்கொண்டிருக்கும்போது அங்கு வந்த தொண்டி காவல் நிலைய சார்பு ஆய்வாளர் சம்பவ இடத்தை பார்வையிட்டு வரைபடம் மற்றும் பார்வை மகசர் தயார் செய்தார் என்றும் அதற்கு சாட்சியாக என்னிடம், பிரபாகரனிடம் கையெழுத்து வாங்கினார்கள் என்றால் தெரியாது. அந்த இடத்தில் பால்கரசுவை குத்த பயன்படுத்திய 25 செமீ நீளமுள்ள பிளாஸ்டிக் கைப்பிடியுடன் கூடிய கத்தியை சார்பு ஆய்வாளர் எங்கள் முன்பு சார்பு ஆய்வாளர் கைப்பற்றினார் என்றும், அதற்கு சாட்சியாக நானும், பிரபாகரனும் அத்தாட்சியில் கையெழுத்து செய்தோம் என்றால் தெரியாது. எதிரிகள் எங்கள் ஊரைச் சேர்ந்தவர்கள் என்பதால் அவர்களை காப்பற்றவேண்டும் என்பதற்காக சார்பு ஆய்வாளர் எங்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு வரைபடம், பார்வை மகசர் தயார்

செய்யவில்லை என்றும், கத்தியை கைப்பற்றி அத்தாட்சி தயார் செய்து எங்களிடம் கையெழுத்து பெறவில்லை என்றும் போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க கையெழுத்து மட்டும் போட்டுக்கொடுத்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u> –

Sd/-சி.மோகன்ராம்,

கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.